# சுதேசமித்திரன்

நமக்குத் தொழில் நாட்டுக்கு உழைத்தல் இமை பொழுதும் சோராதிருத்தல்

சக்கரம் 1 ஆரம் 8 டிசம்பர் 2015

என்ன வளம் இல்லை?

## பேராசை

தமிழின் புராதனத்துவமும் நவீனத்துவமும்

## Who is the Culprit? An unknown mystery!



சென்னை மற்றும் கடலூரில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவரும் தன்னார்வலர்களுக்கு இம்மாத இதழை படைத்தளிக்கிறோம்.



# பேராசை

க. விசயகிருகுணன்

**பேராசை கொண்ட முட்டாள்கள் நாம்?**

நம்ம ஊரு சென்னை, உலகின் இரண்டாவது நீளமான எழில் கொஞ்சும் கடற்கரை, உலகின் தலைச்சிறந்த மாநகரங்களுள் சென்னைக்கும் ஒரு முக்கியமான இடம், ஆசியாவின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப பூங்கா என பல்வேறு சிறப்புகளுக்கு உரிய மாநிலத்தின் தலைநகரம் மூன்று நாட்கள் விடாது பெய்த மழையில் அத்தனை சிறப்புகளையும் கரைத்து விட்டது என்றே கூறுமளவுக்கு எங்கும் வெள்ளம். வெள்ளம் என்று கூறிகொண்டாலும் அதை கழிவு நீர் என்றழைப்பதே பொருந்தும். இதுதான் இன்றைய நிலை. பெய்த பேய் மழையில் நடந்த சில நல்ல விஷயம் கூவம் ஆறாக மீண்டும் உருவெடுத்தது, அடையாறு என்பது சாக்கடை அல்ல சென்னையை ஒரு காலத்தில் சிறப்பித்த ஆறு என்பது இன்றைய தலைமுறையினருக்கு தெரியபடுத்தியது. மழை ஒன்றும் இந்த ஆண்டு மட்டும் புதிதாக பெய்யவில்லை அது ஆண்டு தோறும் பெய்துகொண்டு தான் உள்ளது, ஆட்சியாளர்களும் முன்பு கூறிய அதே வசனத்தையும், அதே இழப்பீடு என்னும் இலவசத்தையும் வழங்கிக்கொண்டு தான் உள்ளனர். நாமும் ஆண்டுதோறும் எந்தவித எதிர்ப்பையும் காட்டமால் அதை பெற்றுக்கொண்டு தான் வருகிறோம். ஒரு காலத்தில் பல நூறு ஏரிகள் இருந்த சென்னை தண்ணீர் செல்லகூட இயலாத அளவுக்கு கல்மேடுகளாக உருமாறியுள்ளது, அதன் விளைவு இன்றைய வெள்ளம். ஆட்சியாளர்களை குறைகூறுவதை விட நமது பேராசைக்கு நாம் கொடுக்கும் விலையே இந்த சூழ்நிலை என்று உணரும் நேரமிது. தான் உண்டு, தன் மக்கள் சுகமாய் வாழ்ந்தால் போதும் என்று எண்ணும் நமக்கு இன்றைக்கு செய்யும் தவறுகளால் நம் எதிர்கால சந்ததியினர் பாதிக்கபடுவார்கள் என்ற எண்ணம் மட்டும் வருவதேயில்லை அப்படி எண்ணியிருந்தால் நாம் ஏரிகளை, குளங்களை, காடுகளை அழித்து கல் கட்டிடங்களாக உருவாக்கியிருக்கமாட்டோம். ஆனால் இன்றைக்கு அறிவியல், சுதந்திரம் பற்றி பேசும் பலருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டை ஆண்ட அரசர்கள் எதிகால சந்ததியினரின் நலனுக்காக தொலைநோக்கு பார்வையுடன் வெட்டிவைத்த ஏரியையும், குளங்களையும் பாதுகாக்கும் அளவுக்கு கூட தொலைநோக்கு அறிவு இல்லை என்பதே நிதர்சனமான உண்மை. நம்மை ஆளும் ஆட்சியாளர்களும் ஒவ்வொரு வருடமும் மழைக்காலத்தில் வடிகாளுக்கென்று இவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளதாக செய்திகள் வந்த வண்ணம் இருக்கும், அதை நாம் என்றுமே நினைவில் கொண்டதில்லை, அவர்கள் எங்கு அதை செயல்படுத்தினார்கள் என்பதும் நமக்கு தெரிவதில்லை, ஒவ்வொரு மழைகாலம் முடிந்ததும் புது சாலைகள் பல இடங்களில் போடப்படும் அடுத்த மழை வருவதற்குள் பாதி சாலைகள் உடைந்து மண்ணாகும் மீதம் உள்ளதை பெரும் மழை கரைத்துக் கொண்டுபோய் மீண்டும் சாலை



போடும் நிலைக்கு வந்துவிடும். இதை யாருடைய பேராசைக்கு யார் கொடுக்கும் விலை என்று தெரியவில்லை.

மூன்று நாள் பெய்த மழையில் 80% தண்ணீர் கடலில் போய் வீணாக கலந்துள்ளது. இந்த ஆண்டு மட்டுமல்ல ஆண்டு தோறும் இதே நிலை தான் நீடிக்கிறது, இதற்கு நம்மை ஆண்ட எந்த ஒரு அரசுமே நல்ல தீர்வை காணவில்லை. விளை நிலங்கள், ஏரிகள், குளங்களை விலை நிலங்களாக மாற்ற கூடாதென்று சட்டம் உள்ளது ஆனால் இவையனைத்துமே ஏட்டில் மட்டுமே உள்ளது என்று நமக்கு இயற்கை பல நேரங்களில் உணர்த்தியுள்ளது. முன்னொரு காலத்தில் மாதம் மும்மாரி பெய்த மழை இன்று மூன்று மாதங்கள் கூட முழுவதும் பெய்வதில்லை, அப்படியிருந்தும் கிடைக்கும் தண்ணீரை கடலில் கலக்கவிட்டு ஆண்டு தோறும் அண்டை மாநிலங்களில் கையேந்தும் நிலையையே நாம் தொடர்கிறோம்.

நம் பேராசைக்கு நாம் கொடுக்கும் விலை நம் எதிர்கால சந்ததியினர் நாளை அடிப்படை ஆதாரங்களுக்காக போராடும் நிலைமை. தண்ணீர் மட்டும் அல்ல நிலம், காற்று என்று சகல இயற்கை ஆதாரங்களையும் நம் பேராசைக்கு விலையாக கொடுத்துவிட்டோம். ஆறுகள் அனைத்தும் கழிவுகளை கொட்டும் சாக்கடையகியது, விளை நிலங்கள் கல் மேடுகளாகவும், குப்பை தொட்டிகளாகவும் மாறியது, காற்று கேள்வியே கேட்க வேண்டாம் என்னும் அளவுக்கு நஞ்சாகிக்கொண்டிருக்கிறது. இதன் விலை நாளைய சந்ததியினரின் வாழ்க்கை கேள்விக்குறியாகி நிற்கிறது. இனி வரும் காலமாவது நாம் செய்யும் தவறுகளை உணர்தல் வேண்டும். இது நம் தலைநகரத்தில் மட்டும் உள்ள பிரச்சனையன்று, மாநிலம் முழுவதும், ஏன் தேசம் முழுவதுமே இதே நிலைமை தான். பல நேரங்களில் நகரத்துக்கு கொடுக்கும் முன்னுரிமை மாநிலத்தின் கிராமப்புறங்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. கிராமங்கள் எவ்வளவு இன்னல்களை சந்திக்கும் என்பதை வருணதேவன் நகரத்து மக்களுக்கும் உணர்த்தியுள்ளார் என்றே கூற வேண்டும். அறிவியலை கொண்டு எதையும் சாதிக்கும் வல்லமை இருப்பதாய் மார்தட்டிக்கொள்ளும் எந்த ஒரு வல்லரசு நாடும் இயற்கையின் முன் மண்டியிட்டே தீர வேண்டும். இதை உணராத வரையில் இயற்கைக்கும் நமக்குமான போராட்டம் இன்னும் அபாயகரமாக தொடர்ந்துகொண்டே இருக்கும்.

> வாழ்க்கை என்பது தீர்வு காணவேண்டிய பிரச்சனை அல்ல, அனுபவிக்க வேண்டிய உண்மை.



# என்ன வளம் இல்லை?

கார். அகிலன்

கம்பிகள் நட்டு கட்டப்படும் கட்டடங்கள்கூட இடிந்து விழுகின்றன இந்நாளில். பொறியியல் கல்லூரிகள் இல்லாத காலத்திலேயே கல்லணையை கட்டியவன் தமிழன். பூச்சி மருந்துகள் இல்லாது பூச்சி விரட்டிகள் பயன்படுத்தி முப்போகமும் விளைவித்தவன் தமிழன். உலகத்திற்கே பொதுவான நூல், திருக்குறள். தஞ்சை கோவிலின் கட்டடக் கலைக்கு நிகரான கலை உண்டா? ஆமையின் வழித்தடத்தை பயன்படுத்தி கடல் போக்குவரத்து கண்டவன் தமிழன். அரசு என்ற பெயரில் வெளிநாட்டு குளிர்பான நிறுவனங்களுக்கு தரகு வேலை செய்கின்ற அரசியல்வாதிகளுக்கு நடுவே ஆங்காங்கே இளநீர் விற்று தன் அன்றாட பசியைப் போக்கிக்கொள்கிறான் ஏழை தமிழன். என்ன செய்யவிருக்கிறது அரசு? விபத்து ஏற்பட்டால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் புற்பூண்டுகள்கூட முளைக்காத அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் அணு உலையை தமிழகத்தில் அமைத்தது ஏன்? அணு உலையை ஏற்றோம், அதன் உரேனிய கழிவுகளை எங்கு புதைப்பது? அதுவும் இம்மண்ணில் தானா? இந்தியா வல்லரசாக அணு உலையின் மூலமாக தமிழகம் தனது பங்களிப்பைத் தரட்டும், அதே இந்தியா வல்லரசாக மீதமுள்ள மாநிலங்களில் ஏதேனும் ஒன்றாவது உரேனிய கழிவை தன் மண்ணில் புதைக்க அனுமதிக்குமா? மீத்தேன் திட்டம். விவசாயத்தின் முற்றுப்புள்ளி. அதற்கும் தமிழகம்தான் இந்திய அரசின் இலக்கு. நியூட்ரினோ ஆய்வு மையம். இந்தியாவிலேயே தேனியில் மட்டும்தான் மலைகள் இருக்கின்றனவோ?

திட்டமிட்டு நம்மில் திணிக்கப்பட்ட பொருட்கள் பல, மண்ணின் நிறமான கருப்பை இழிவு படுத்தி முகச்சாயம் வெளுக்க வெளிநாட்டு மருந்துகள். சூடு தணிக்கும் இளநீரை அழித்த கழிவறை கழுவக்கூடிய குளிர்பானங்கள். ஆவி உணவாம் இட்லியை மறைத்த பீட்சா என அடிப்படையையே உலுக்குகின்றன. எண்ணற்ற தொழிற்சாலைகளை அமைத்து முத்து பெருநகராம் தூத்துக்குடியின் முத்து வளத்தை அழித்தோம். வேலைவாய்ப்பு, தொழில்வளம் என்ற பெயரில் கடலூரின் கடல் நீரை பாழ் செய்தோம். பசுமை புரட்சி என்ற பெயரில் முதலாளிகள் சுரண்ட நம் மண் வளத்தை தொலைத்தோம். அண்மையில் கண்ட திரைப்படம் ஒன்றில் வரும் வசனம் இது "யாரையாவது ஏமாத்தணும்னா அவனுக்கு ஆசைய தூண்டணும்". அது தான் நடந்தது, மகசூல் பெருகும், குறைந்த நிலத்தில் நிறைய விளைவிக்கலாம் என்று ஆசையைத் தூண்டினர். விளைவு, மண்ணின் தரம் குறையத் துவங்கியது, வளம் குன்றியது. என்ன விதைத்தாலும் வீணாகியது. விவசாயிகள் பேரிழப்பு அடைந்தனர். இதுதான் பசுமை புரட்சி. நம் பாரம்பரிய பயிர்களை அழித்து பெருமுதாலாளிகள் சொல்வதை விளைவிப்பதே இத்திட்டத்தின் நோக்கம். கார், அன்னமழகி, இலுப்பைப்பூ சம்பா, ஒட்டடையான், மாப்பிள்ளைச் சம்பா, கருங்குறுவை முதலிய பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நெல்வகைகள் நம்மிடம் இருந்தன. அவ்வனைத்தையும் அழித்தது இந்த பசுமை புரட்சி. கடும் வரட்சியிலும், வெள்ளத்திலும் விளையக்கூடிய (குதிரைவாலி)

நெல்வகைகள் நம்மிடம் இருந்தன. அந்த நெல் வகைகளை சில நல்லோர் இயக்கங்கள் தற்பொழுது மீட்டெடுக்கும் பணியில் இறங்கியிருப்பது ஆறுதல் அளிக்கிறது. விவசாயிகளின் தற்கொலை விவசாயத்தில் அவர்களுக்கு ஏற்படும் நெருக்கடியை உணர்த்துகிறது, இதற்கான வழியாக நான் நினைப்பது பாரம்பரிய பயிர்களை விளைவிப்பதேயாகும். மண் வளம் காக்க பூச்சிக்கொல்லிகளையும், இதர வேதி உரங்களையும் தவிர்க்க வேண்டும். நீர் மேலாண்மையே தற்போதைய முகன்மையான தேவை.

## தமிழின் புராதனத்துவமும் நவீனத்துவமும் - III

### தமிழின் நவீனத்துவம்

பதினெட்டாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் ஐரோப்பியராட்சி தமிழ்நாட்டில் ஏற்பட்டதும் மேனாட்டுச் செல்வாக்குத் தமிழ்நாட்டிலே தீவிரமாக இடம்பெறத் தொடங்கிற்று. நாயக்கர் காலத் தமிழ் மக்களின் தனிப்பண்பாகப் பழமை போற்றும் இயல்பு நிலவியதால் அக்காலத்தைத் தொடாந்துவரும் காலத்திற் கீழைநாட்டு வாழ்க்கை முறைக்கும் மேலைநாட்டு வாழ்க்கை முறைக்கும் மோதுதல் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. கல்வி விருத்தியும் கிறித்தவ மதப் பிரசாரமும் மேனாட்டுச் செல்வாக்குப் பரவுவதற்குக் கருவிகளாயின. ஈடாக ஆரிய படையெடுப்பும் தமிழை தொய்வையடைச் செய்ய விழைந்தது. இருந்தும் தமிழ் தன் மாண்பை தக்கவைத்துகொண்டு நவீனத்துவம் பெற்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தொடர்பாக இலக்கிய வளம் பெற்ற மொழியாகத் தமிழ்விளங்குவது தமிழருக்குக் கலையுணர்ச்சி சிறந்திருப்பதற்குச் சான்று.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவர் (இயற்பெயர் கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி) தமிழால் கவரப்பட்டு ‘தேம்பாவணி’ என்கிற தேன் போன்ற இனிய பாடல்களாலான இலக்கிய மாலை தொடுத்தார். இந்நூலின் தலைவர் இயேசு பெருமானின் வளர்ப்பு தந்தை சூசையப்பர். இநூலை “கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம்” என்று சிறப்பிப்பர்.

அருட்பெருஞ்சோதி இராமலிங்கசுவாமிகள் முதலியோர் சமரசசன் மார்க்கத்தை விளம்பினர். வள்ளல்பெருமான் அவர்கள் அமுதக் காற்றை வாசிப்பதற்காகதூங்காமல் விழித்து இருக்கும் சூத்திரத்தை அறிந்து தமிழால் அதை மக்கட்கு உணர்த்தினார். அந்த அற்புத அருட்பா

தூங்காதே விழித்திருக்கும்
ஸூது அறிவித்து
எனையாண்ட துறையே
என்னை
நீங்காதே என்னுயிரில் கலந்து
கொண்ட பதியே கால்
நீட்டிப் பின்னே
வாங்காதே விரைந்து நீ
வரல் வேண்டும் தாழ்த்திடில்
என்மனந்தான் சற்றும்
தாங்காதே இது நினது
தனித்த திருவுளம் அறிந்த
சரிதந்தானே !

பின்னர், தமிழ்நாட்டில் பாரதியுகம் தோன்றுகிறது. மகாகவியின் ஏராளமான தமிழ் தடாகத்திலிருந்து ஒரு சிறு துளியை நோக்குவோம்.



அச்சம் தவிர்.
ஆண்மை தவறேல்.
இளைத்தல் இகழ்ச்சி.
ஈகை திறன்.
உடலினை உறுதிசெய்.
ஊண்மிக விரும்பு.
எண்ணுவ துயர்வு.
ஏறுபோல் நட.
ஐம்பொறி ஆட்சிகொள்.
ஒற்றுமை வலிமையாம்.

சிறுதுளியல்ல அது மாபெரும் வெள்ளம். மானுடம் செழிக்க தமிழ்பால் ஊற்று.

பாரதியுகம் தொடர்ந்து, புரட்சிக்கவிஞன் பாரதிதானும் தமிழ் நவீனுத்துவம் பெற தன் பங்களிப்பை அளித்தார். 'தமிழ் வாழ்த்து' பாடலிருந்து

தமிழே வாழ்க! தாயே வாழ்க!
அமிழ்தே வாழ்க! அன்பே வாழ்க!
கமழக் கமழக் கனிந்த கனியே
அமைந்த வாழ்வின் அழகே வாழ்க!
சேர சோழ பாண்டிய ரெல்லாம்
ஆர வளர்த்த ஆயே வாழ்க!
ஊரும் பேரும் தெரியா தவரும்
பாரோர் அறியச் செய்தாய் வாழ்க!

சுருங்கக் கூறினால் பழமையும் புதுமையும் தம்முள் மோதுதலை நீக்கி ஒருவித இணைப்பைப் பெறுகின்றன எனலாம். தற்போதுள்ள இணையம்(Internet) வசதியினால் 'தமிழ்' சமயம், நாடு, எல்லைகள் கடந்து வானுயர வளர்ந்து கொண்டே இருக்கின்றது. தமிழால் தமிழனுக்கு சிறப்பா ? தகுதியுடையவனுக்கு தமிழ் சொந்தமாகிறதா?

தமிழ் வளர பாடுபடுவோம் ! சங்க நாதம் முழங்குவோம் !
வாழ்க தமிழ் ! வளர்க தமிழ் !!!

- கெஜலட்சுமி

## அகிம்சை வழியில் ஒரு துவக்கம்

தமிழ்நாட்டின் உடனடி தேவை லோக் ஆயுக்தா- கர்நாடக முதலமைச்சர் எடியயூரப்பா பதவி விலக முக்கிய காரணமாக இருந்த நேர்மையான லோக் ஆயுக்த நீதிபதி சந்தோஷ் ஹெக்டே விளக்கம்.

அறப்போர் இயக்கம் தமிழகத்தில் லோக் ஆயுக்தா சட்டம் கொண்டு வருவதற்காக தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறது. கடந்த இரண்டு மாதங்களாக சென்னையில் பல இடங்களில் மக்கள் மத்தியில் லோக் ஆயுக்தா பற்றிய விழிப்புணர்வு செய்யப்பட்டது.



தமிழகத்தில் லோக் ஆயுக்தா முன்மாதிரி சட்ட வடிவம் உருவாக்க நீதிபதி சந்தோஷ் ஹெக்டே, பத்திரிக்கையாளர் ஞாநி, முன்னாள் துணை வேந்தர் வசந்தி தேவி , வழக்கறிஞ்சர் சுத்த ராமலிங்கம், PUCL சுரேஷ் மற்றும் ஓய்வு பெற்ற IAS அதிகாரி பூர்ணலிங்கம் கொண்ட வல்லுநர் குழு அமைக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்களிடையே லோக் ஆயுக்தா குறித்த கருத்துகள் பெறப்பட்டது. இதில் இப்போதுழுது உள்ள CBCID மற்றும் காவல்துறை கண்காணிப்பு குழு நேர்மையாக ஊழல்/ லஞ்சம் பற்றி விசாரிப்பதில்லை என்று 88% மக்கள் தெரிவித்துள்ளனர். மேலும் லோக் ஆயுக்தா வந்தாள் ஊழல் குறையும் என்று நம்புகிரீர்களா என்ற கேள்விக்கு 68% மக்கள் குறையும் என்றும் 24% மக்கள் தெரியவில்லை என்றும் 8% மக்கள் குறையாது என்றும் தெரிவித்துள்ளனர்.

மக்கள் கருத்துகளையும் கர்நாடகா மற்றும் உத்திரகாந்து போன்ற மாநிலங்களில் உள்ள லோக் ஆயுக்தாவிற்கான முன்மாதிரியான சட்ட வடிவத்தை முடிவு செய்துள்ளனர் மேலும் நீதிபதி சந்தோஷ் ஹெக்டே அவர்கள் மக்களுக்கு லோக் ஆயுக்தா பற்றி சிறப்புரை ஆற்றினார்.

கர்நாடகாவில் லோக் ஆயுக்தாவினால் ஏற்பட்ட ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் குரித்தும் தமிழகத்தில் ஏன் லோக் ஆயுக்தா உடனடி தேவை என்பது குரித்தும் அவரது விரிவுரையில் விளக்கினார்.

அறப்போர் இயக்கம் இதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பெரிய அளவில் சட்ட விழிப்புணர்வு ஏற்படுத்த 31 அக்டோபர் அன்று மெரீனா கடற்கரையில் மாலை 4:30 மணிக்கு ஒரு அமைதி விழிப்புணர்வு பயணம் மேற்கொண்டது.

மேலும் இந்த சட்ட முன்வடிபத்தை அரசிடம் கொடுத்து இது போன்ற ஒன்றை உடனடியாக கொண்டு வர தொடர்ந்து அழுத்தம் தரப்படும். மற்ற அனைத்து அரசியல் கட்சிகளையும் சந்தித்து இதைப் போன்ற ஒரு சட்டத்திற்கு குரல் கொடுக்கக் கேட்போம்.

# Who is the Culprit? An unknown mystery!

After the Silent walk with Arappor Team, myself and my friends stayed back at the Bessant Nagar beach and we had a lot of fun until the late evening tides started roaring. On the way back after having fishes and corn, we met a person sitting with a box and some cards near him. The box was designed like a prison cell in which there was a green parrot. We passed through his set ups. Myself and Mohan laughing at it inside, somehow managed to show it to the others. We planned to spend some time with that parrot and its man. We approached him and heard some truths from him. Yes!



Obviously a truth. Anything is true when talked in general. He (any person of this kind) speaks only generally. Whatever is said in general, human mind somehow gathers that incident that suits in our life and finally matches it. So, thus it is a real truth he has spoken. Having that truth in mind with some manipulated statements to justify that he was talking in general, with some real time examples I continued walking with them arguing.

Keeping up that spirit, I just recollected something that happened in front of my eyes. (Names used here are not exactly the same)

*Kanth was at the age of his marriage. His parents were searching for a perfect match for him. He never wanted to love a girl. But he loved his parents and his little cute sister a lot. He does a lot for the Society. He is a real human being with no bad habits like smoking or drinking. He can be scolded at only for his genuinely behavior and intelligence. He is a genius. He masters anything that he does. Not only me, but also others who are with him closely admire him a lot. But, why is such a man not able to get married? None of us know the reason. People say, “He does too much for the society!” But it is our duty and he is doing that with all his heart. Others say, “He is a self-motived person!” He always suffers and takes care of his family a lot but that doesn’t mean that he is such a selfish person. It is a debt to his parents that he should serve them with all that he can. But, all these can never be a reason for it.*

*They might have seen a number of astrologers and a number of horoscopes. But, that has decided everything. But why? Why is that sheet of paper deciding a man’s life? If an astrologer can draw the* **chakras** *by guessing the future of the child when he is born, why can’t he just draw it so that the child never has any problem! Now you may get a question, “How can this affect anyone’s marriage and also that marriage is a matter of two horoscopes to be matched, and not just a single one!?” Agreed! Here is the trap that you fail to overcome. In any case, obviously any astrologer who checks the same two horoscopes of the same two persons must say the same truth.*

*Kanth’s parents were happy to hear from their astrologer, “You have 8/10 matching. And don’t miss this opportunity. It is a rare match!” Delivering this message to the girl’s side, Kanth’s parents waited for their call at 8:00 PM. The girl’s family said that if they are also happy with the horoscope, they will make a call at 8:00PM. Kanth’s parents were so exited from 7:30 PM. They had their voices bold and completely hopeful about the reply to be positive at 8:00PM. They waited until the clock struck 8:00. Kanth’s father waited for a few more minutes near the phone itself. The phone rang and*



*he picked up the call in pride. Gradually his voice turned to sound slow. Then he stared at us Kanth's mom and just hung the call up. The astrologer from the other side said that there was no proper matching, and this matching was not enough. This is exactly the contrast! What has taken place here!? I seriously wonder. Whose mistake was it? Is the astrologer or the astrology the culprit? It's an unknown mystery!  For all the parents and relatives who are in search of a bride or a bridegroom, please don't go to the astrologers to learn the match. They know nothing about your sons and daughters. If you think that marriages after the consultancy of an astrologers will only lead a good life, then think of those people who have divorced even after such consultancies.*

When I sat for the astrology, the man noticed all of my friends instead of me. That was the time when these guys were making fun of me by calling some girl names. He concluded something of himself and finally told me some shits. Since I kept smiling and didn't speak anything, he said that I am a Silent person who obeys other people. As Mukesh was asking me to sit down for astrology, the man got a mind-set that Mukesh is a commander and he never obeys any one and also that none can control him. It's all a general talk. Actually he talks what he sees. There is no predictions in this. This is astrologer's work nowadays. So are the astrologers the culprit?

"The scientific community rejects astrology as having no explanatory power for describing the universe, and consider it a pseudoscience. Scientific testing of astrology has been conducted, and no evidence has been found to support any of the premises or purported effects outlined in astrological traditions. "   *_Wikipedia*

***Is Astrologer or the Astrology the culprit? It's an unknown mystery!***

***_G.Surendar Thina***



# வீரபாண்டிய கட்டபொம்மனின் இன்றைய வசனம்

கெஜலட்சுமி

வானம் பொழிந்து
தள்ளியது
மாகாணங்கள் மூழ்கியது!
உமக்கேன் கட்டவேண்டும்
வரி ?

எங்களுடன் படகில்
பயணம் செய்தாயா ?

பன் பிஸ்கட்டுக்கு
காத்திருந்தாயா ?

மாற்று உடைக்கு
மாற்றான் உடையை உடுத்தினாயா ?

அகதிகள் போல் சொந்த
ஊரிலேயே

பள்ளி கல்லூரிகளில்
முகாமிட்டுருந்தாயா ?

அனைத்து உடைமைகளையும்
வெள்ளம் வாரிக் கொண்டு சென்றதே !

உமக்கேன் இனி சாலை
வரி, வீட்டு வரி ?

வரிந்து கட்டிக்
கொண்டு வந்த தன்னார்வ தொண்டு
உள்ளங்களைப் போல்
உடனடி இரக்கம் பாராட்டி இருக்கலாமே ?

அரையாண்டு பரிட்சை
விலக்கு போல்

இவ்வாண்டுவாவாது
வரிகளை விலக்கலாமே ?

## சமூக அக்கறைகொண்ட அமைப்புகளின் கடந்த மாத பணிகள்



### துவக்கம்

மதுரவாயல் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நூல், கையேடு, எழுதுகோல் கொடுத்தும் குடும்பங்களுக்கு வெள்ள மீட்பு உதவிப் பொருட்கள் கொடுத்தும் துணை நின்றனர் துவக்கம் அமைப்பினர்.



### நேச்சுரல் லவ்வர்ஸ் (Natural Lovers)

எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு குருதிக் கொடை அளிக்கப்பட்டது. மேலும் வெள்ள மீட்பு உதவிப் பொருட்களும் வழங்கப்பட்டன.

தங்களது மேலான ஆலோசனைகளுக்கும் பங்களிப்பிற்கும் தொடர்புகொள்ளுங்கள்.
மின்னஞ்சல் : emagz@thozhan.org
பேசி: 8122195591